16.04.2026

அ.வ.எண்.294/2015

<u>வா.சா.1 குப்புசாமி குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

1. 1ம் பிரதிவாதி தாந்தோனி கிரையம் வாங்கின சொத்தின் சர்வே எண்.93/1 என்றால் சரிதான். அந்த சர்வே எண்.93/1 ல் 8 ஏக்கர் 98 செண்டில் 10 1/2 செண்டு 1ம் பிரதிவாதி கிரையம் வாங்கினார் என்றால் எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி எந்த வருடம் கிரையம் வாங்கினார் என்றால் எனக்கு தெரியாது. 1972ம் வருடம் 1ம் பிரதிவாதி கிரையம் வாங்கிய போது சாலை இருந்ததா என்றால் இருந்தது. மேற்சொன்ன சாலை மண் சாலையா அல்லது தார் சாலையா என்றால் தார் சாலை இருந்தது. 1ம் பிரதிவாதி கிரையம் வாங்கும்போது நான் ஆட்சேபணை செய்தேனா என்றால் எனக்கு தெரியாது.

2. தாவா எ அட்டவணை சொத்திற்கு அருகில் என்னுடைய விவசாய நிலம் உள்ளதா என்றால் உள்ளது. மேற்சொன்ன விவசாய நிலம் என் பெயரில் இருப்பதற்கு ஆவணங்கள் எதுவும் வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அந்த சொத்திற்காக நான் வழக்கு தாக்கல் செய்யவில்லை, அதனால் விவசாய நிலத்தின் ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை. தாவா சி அட்டவணை சொத்தின் பழைய சர்வே எண்.93/1 என்று வழக்கில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. 1ம் பிரதிவாதி தந்தோனி இடத்தின் வடக்கு பக்கம் எனது காலி மனை உள்ளதா என்றால் உள்ளது.

3. வா.சா.ஆ.8 மின்சார கட்டண ரசீதுகளில் சில ரசீதுகள் கோழியாலம் கிராமத்தில் உள்ள சொத்துக்கான ரசீதுகள் என்றால் சரிதான், முதலில் கோழியாலம் கிராமமாக இருந்தது, அதன்பின்புதான் பாப்பநல்லூர் கிராமமாக மாறியது. எந்த வருடத்தில் பாப்பநல்லூர் கிராமம் ஏற்பட்டது என்றால் எனக்கு தெரியாது. பாப்பநல்லூர் கிராமத்தில் எனக்கு எந்த வீடும் கிடையாது என்றால் சரியல்ல. நான் விவசாய நிலங்களை விற்றுவிட்டேன், நத்தம் நிலத்தில் உள்ள சொத்தை விற்பதற்காக தவறாக இந்த வழக்கை தாக்கல் செய்து நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. அதனால் 1ம் பிரதிவாதி நிலத்தை சாலையாக காண்பித்து இந்த வழக்கை தவறாக தாக்கல் செய்து நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல.

4. 1ம் பிரதிவாதிக்கு தெரியாமல் வருவாய் ஆவணங்களை திருத்தம் செய்து இந்த வழக்கை நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. எனது நிலத்திற்கு செல்வதற்கு பிள்ளையார் கோவில் வழியாக செல்வதற்கு அமைப்பு உள்ளது என்றால் சரியல்ல, தாவா சி அட்டவணை சொத்துதான் வழியாக உள்ளது. 1945ம் வருடத்திலிருந்து தாவா சி அட்டவணை சொத்து வழியாகதான் பயன்படுத்தி வருகிறோம். அதை நிரூபிப்பதற்கு ஆவணங்கள் எதுவும் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பொதுவாக கிராமத்தில் நிலத்தை வாங்கும்போது வழி பயன்படுத்துவதற்காக யாரும் ஆட்சேபணை செய்யமாட்டார்கள் என்றால் சரியல்ல, தாவா சி அட்டவணை சொத்தை காலம்காலமாக கிராமத்து மக்கள் வழிக்காக தான் பயன்படுத்தி வருகிறார்கள். 2ம் வாதி

லட்சுமிகாந்த் எந்த பிரச்சனையும் வழிக்காக செய்தது கிடையாது, நான் மட்டும் தான் 2015ம் வருடத்திலிருந்து பிரச்சனை செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. 2ம் வாதி லட்சுமிகாந்த் இறந்துவிட்டார் என்றால் சரிதான். அவருக்கு வாரிசுகள் இருக்கிறார்களா என்றால் சரிதான். அவரின் வாரிசுகளை இந்த வழக்கில் விசாரணை செய்ய போகிறேனா என்றால் அவர்கள் வேலைக்கு செல்வதால் விசாரணை செய்ய முடியாது.

4. தாவா சி அட்டவணை சொத்தை காலம்காலமாக வழியாக பயன்படுத்தி வருகிறோம் என்று கூறுவது தவறு மற்றும் எந்த காலத்திலும் தாவா சி அட்டவணை சொத்தை நான் பயன்படுத்தியது கிடையாது என்றால் சரியல்ல. தாவா சி அட்டவணை சொத்தின் மேற்கு பக்கம் எத்தனை வீடுகள் உள்ளது என்றால் நான்கு வீடுகள் உள்ளது. பிரதிவாதி தாவா சி அட்டவணை சொத்தை வழிக்காக பயன்படுத்தி வருவதை தொந்தரவு செய்கிறார்கள் என்று கூறி நஷ்ட ஈடு கேட்டுள்ளது நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி கிரையம் வாங்கிய சொத்தில் எங்களுக்கு வழி விடவேண்டும் என்று அவசியமில்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி கிரையம் வாங்கும்போது புலவரைபடத்தில் எநத வழியும் இல்லை என்றால் சரியல்ல. எனவே நான் தாக்கல் செய்த வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.